

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 23.05.2026


# 41 பேரைக் கொன்ற பாவத்தின் தொடர்ச்சி!

**உள்துறையை கையில் வைத்திருக்கும் முதலமைச்சர் விஜய், தனக்குக் கீழ் பணியாற்றும் காவலர்களை அச்சுறுத்தும் வகையில் பழிவாங்கியதுதான் அவரது முதல் நடவடிக்கை ஆகும். கரூர் காவல்துறையினரை முழுமையாக இடம் மாற்றி இருப்பதில் அவரது வஞ்சக எண்ணம்தான் வெளிப்பட்டுள்ளது.**

**மொத்தமாக கரூர் காவலர்களை இடம் மாற்றம் செய்ய வேண்டிய அவசியம் என்ன வந்தது? அவர்கள் உண்மையைச் சொன்னதுதான் காரணமா? உண்மையைத் தொடர்ந்து சொல்லக் கூடாது என்பதும் காரணம் ஆகும். 'தூய சக்தி' எனச் சிரிக்கும் மனிதரின் பல்லில் பெரிய கறை இருப்பதை கரூர் நடவடிக்கை காட்டுகிறது.**

**கரூரில் 41 பேர் உயிரிழந்த சம்பவம், வரலாற்றில் ஏற்பட்ட மாபெரும் களங்கம் ஆகும். அதற்கு முழுப் பொறுப்பு ஏற்க வேண்டியவர் விஜய் மட்டும்தான். ஆனால் அப்போது அங்கு காவலுக்கு இருந்த போலீஸாரை வேட்டையாடி இருக்கிறார் முதலமைச்சர் விஜய். கரூர் காவல் அதிகாரிகள் 19 பேரை முதலமைச்சர் விஜய் இடம் மாற்றம் செய்துள்ளார். இப்படி ஒரு ஐடியா கொடுத்து, 'எங்கப்பன் குதிருக்குள் இல்லை' என்று காட்டிக் கொடுத்த புத்திசாலி யாரோ?**

கரூரில் காவல் துறையினரால் ஒரு அசம்பாவிதச் சம்பவம் நடந்திருந்தால் அந்த ஊரைச் சேர்ந்த அனைவரையும் மாற்றுவார்கள். ஆனால் விஜய், சொன்ன நேரத்துக்கு வராததால் சாப்பாடு இல்லாமலும், தண்ணீர் இல்லாமலும் செத்துப் போனவர்களுக்கு கரூர் காவல் துறை எப்படிப் பொறுப்பாக முடியும்? விஜய் வரும் வரை அவரைப் பார்க்க வந்தவர்களுக்கு வடை, பாயாசத்துடன் உணவு தயாரித்துத் தர வேண்டியது கரூர் போலீஸாரின் கடமையா?

27-9-2025 அன்று கரூர் மாவட்டத்தில் நிகழ்ந்த துயரச் சம்பவம், விஜயைத் தவிர ஒட்டு மொத்தத் தமிழக மக்களின் மனதையும் உலுக்கியது. மனிதர்கள் செத்து விழுந்து கொண்டு இருந்தபோது விமானத்தைப் பிடித்து சென்னைக்கு ஓடி வந்தவர் அவர். ஒரு வாரம் கழித்துக்கூட கரூர் போய் அந்தக் குடும்பங்களுக்கு ஆறுதல் சொல்லவில்லை. அந்தக் குடும்பத்தினரை சென்னைக்கு வரவழைத்து ஹோட்டலில் தங்க வைத்து தனித்தனியாக போய் அழுகாச்சி காவியம் அரங்கேற்றினார் விஜய்.

கரூர் நிகழ்ச்சிக்கு அன்றைய தமிழ்நாடு அரசின் காவல் துறையின் சார்பாக கரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தலைமையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அன்றையதினம் பாதுகாப்புப் பணிக்காக அதிகாரிகள் மற்றும் காவலர்கள் என மொத்தம் 606 பேர்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். மேலும், தீயணைப்புத் துறையைச் சேர்ந்த 17 வீரர்கள் அங்கு பணியில் இருந்தனர். வழக்கமாக அரசியல் பரப்புரைக் கூட்டங்களுக்கு வழங்கப்படும் பாதுகாப்புக் காவலர்களின் எண்ணிக்கையைவிட அதிகமாகவே வழங்கப்பட்டிருந்தது.

**கூட்டம் நடத்த அனுமதி கோரி கொடுத்த கடிதத்தில் மாலை 3 முதல் இரவு 10 மணி வரை என்று குறிப்பிட்டு இருந்தார்கள். ஆனால் செய்தியாளர் சந்திப்பு மற்றும் சமூக ஊடகங்களில் மதியம் 12 மணிக்கு கட்சித் தலைவர் கரூர் வருவதாக அக்கட்சியின் செயலாளர் புஸ்சி ஆனந்த் தெரிவித்து இருந்தார். இதனால் கரூரில் காலை முதலே மக்கள் வரத் தொடங்கினர். உரிய நேரம் சொல்லப்படவும் இல்லை. சொல்லப்பட்ட நேரத்துக்கு வரவும் இல்லை. மதியம் 12 மணிக்கு வருவார் என்று பொதுமக்களுக்குச் சொல்லப்பட்ட விஜய், இரவு 7 மணிக்குதான் வந்தார். 12 மணிக்கு அவர் வருகிறார் என்பதால் காலை 9 மணி முதல் கூட்டம் சேரத் தொடங்கியது. காலை 9 மணி முதல் நிற்கத் தொடங்கியவர்கள் இரவு 7 மணிக்குத்தான் விஜயைப் பார்க்கிறார்கள். ஏழு மணி நேரம் விஜய் தாமதமாக வந்ததற்கு விஜய் பொறுப்பா? கரூர் காவல் துறை பொறுப்பா?**

காலை முதல் காத்திருந்த மக்களுக்கு குடிநீர் தரப்படவில்லை. குடிநீர் கிடைக்கவில்லை. உணவு வழங்கப்பட வில்லை. உணவு வழங்க எந்தவிதமான ஏற்பாடுகளும் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தவர்களால் செய்யப்படவில்லை. இயற்கை உபாதைகளைக் கழிக்க பெண்களால் வெளியில் செல்ல முடியவில்லை. வெளியில் அவர்களைச் செல்ல அனுமதிக்கவும் இல்லை. இவ்வளவு கூட்டம் கூடிவிட்டதே என்று சீக்கிரம் வரவும் இல்லை. தனது படத்துக்கான சூட்டிங்கை கரூரில் நடத்தி இருக்கிறார்கள். அதனால்தான் நெரிசல் ஏற்படட்டும் என்று காத்திருந்தார்கள்.

இந்தச் செய்தி கிடைத்ததும் அன்றைய முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னையில் இருந்து நள்ளிரவே கரூர் வந்து விட்டார். புயல் வேகத்தில் செயல்பட்டார். அன்றைய அமைச்சர் செந்தில் பாலாஜியை அனைத்துப் பணிகளையும் கவனிக்க உத்தரவிட்டார். தமிழ்நாடு அரசு துரிதமாகச் செயல்படாமல் இருந்திருந்தால் மரண எண்ணிக்கை இன்னும் அதிகமாக ஆகி இருக்கும்.

இது தொடர்பாக, கரூர் நகர காவல் நிலையத்தில் குற்ற எண். 856/2025 மற்றும் 864/2025 ஆகிய இரண்டு வழக்குகள பதிவுசெய்யப்பட்டது. சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த குற்றம் சாட்டப்பட்ட மணிகண்டன் என்பவர் 08.10.2025 அன்று கரூர் நீதித்துறை நடுவர் முன்பு சரணடைந்தார். மற்றொரு குற்றவாளியான த.வெ.க. கட்சியின் சேலம் (கிழக்கு) மாவட்டச் செயலாளர் வெங்கடேசன், இரண்டு வழக்குகளிலும் தொடர்புடையதாக 09.10.2025 அன்று கைது செய்யப்பட்டார். வழக்கு முறையாக நடந்தால் முழு உண்மை தெரிந்துவிடும் என்று சி.பி.ஐ. விசாரணை கேட்டு ஓடினார்கள். இப்போது சி.பி.ஐ.யில் மாட்டிக் கொண்டு உள்ளார்கள்.

**இந்த சி.பி.ஐ. விசாரணையில் முழு உண்மையைச் சொல்ல வேண்டிய கடமை கரூர் போலீஸுக்குதான் இருக்கிறது. இரண்டு காவல் அதிகாரிகள் சி.பி.ஐ. முன் ஆஜராகி முழு உண்மையைச் சொல்லி இருக்கிறார்கள். இதனைத் தெரிந்து கொண்டுதான் அவர்கள் 19 பேரையும் இடம் மாற்றம் செய்துள்ளது விஜய் அரசு. 41 பேரைக் கொன்ற பாவத்தின் தொடர்ச்சிதான் இது.**

விஜய்க்காக காத்திருந்து காத்திருந்து மூச்சுத் திணறி உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 41. இதில் ஆண்கள் 13 பேர். பெண்கள் 18 பேர். குழந்தைகள் 10 பேர். இதில் ஆண் குழந்தைகள் 5, பெண் குழந்தை 5. என்ன பாவம் செய்தார்கள் அவர்கள்? அவர்களது மரணத்துக்கு நீதி இன்னும் கிடைக்கவில்லை. ஆனால் அநீதிகள் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

## சமூக வலைதள தகவலை நம்பாதீர்!

# பகுத்தறிவைப் பயன்படுத்துங்கள்!

## மணவிழாவில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. வேண்டுகோள்!

**கோவை, மே 23 -**

**சமூக வலைதள தகவலை நம்பாதீர்கள், பகுத்தறிவைப் பயன்படுத்துங்கள் என்று கோவையில் நடந்த மணவிழாவில் கனிமொழி கருணாநிதி எம்.பி. பேசினார்.**

**கோவை மாதம்பட்டி பகுதியில் நடைபெற்ற திருமண நிகழ்ச்சியில் தி.மு.க. துணை பொதுச் செயலாளரும், எம்.பி.யுமான கனிமொழி கருணாநிதி கலந்து கொண்டார்.**

அதுபோது மணவிழாவில் கனிமொழி கருணாநிதி எம்.பி. பேசியதாவது:-

சுயமரியாதை முறையில் திருமணம் செய்துகொண்ட மணமக்களுக்கு வாழ்த்துகள். இப்படிப்பட்ட திருமணத்தை நாம் 50 ஆண்டுகளுக்கு முன்பு நிச்சயமாக சிந்தித்து பார்த்து இருக்க முடியாது. இந்த நிலை வருவதற்கு எத்தனை ஆண்டு காலமாக தந்தை பெரியார் தொடங்கி, திராவிட இயக்க தலைவர்கள் எல்லாம் போராடி இருக்கிறார்கள். அதனால் அடுத்த தலைமுறை மட்டுமல்ல; இன்று இருக்கக்கூடிய நாமும் தந்தை பெரியார் இந்த மண்ணிற்காக என்ன செய்திருக்கிறார்கள்? என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.



கண்மூடித்தனமாக நம்புகிறோம் அவர் சொன்னார், இவர் சொன்னார் என எதையும் நம்பக்கூடாது. பகுத்தறிவைப் பயன்படுத்த வேண்டும் என்று பெரியார் சொன்னார். இப்போதும் இன்ஸ்டாகிராம், வாட்ஸ் அப் போன்ற சமூக வலை தளத்தில் பல்வேறு தகவல்கள் வந்து கொண்டே இருக்கின்றன. இந்த சமூக வலைதளத்தை பயன்படுத்தி பொய்யான தகவல்களையும் சிலர் பரப்புகின்றனர்.

இன்று இன்ஸ்டாகிராம் வழியாக சொல்லக்கூடிய செய்தி சரியா? தவறா? என்று புரிந்து கொள்ளாமல் கண்மூடித்தனமாக நம்பி விடுகிறோம். அது எப்படிப்பட்ட பாதிப்புகளை உருவாக்கும் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். நம்முடைய பகுத்தறிவை பயன்படுத்தி அந்தச் செய்தி உண்மைதானா என்பதை பகுத்து அறிய வேண்டும். இதையெல்லாம் புரிந்து கொள்வதற்கு நமக்கு பகுத்தறிவு வேண்டும். பகுத்தறிவு மிக்க அடுத்த தலைமுறையை உருவாக்க வேண்டும்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. கூறினார்.

## 'ராயல் என்பீல்டு' நிறுவனம் ரூ.2500 கோடியில் ஆந்திராவில் முதலீடு!

# தமிழகத்தில் தொடர்ந்து பறிபோகும் தொழில் முதலீடுகள்!

## கண்டு கொள்ளாத த.வெ.க. ஆட்சி!

*சென்னை, மே 23 -*

*ஏற்கனவே ரூ.1500 கோடி மதிப்பிலான போர் விமான உற்பத்தி திட்டம் ஆந்திரா சென்ற நிலையில், தற்போது மேலும் ரூ.2500 கோடியிலான ராயல் என்பீல்டு நிறுவனமும் ஆந்திரா சென்றிருப்பது தமிழகத்துக்கு பெரும் பின்னடைவாக பார்க்கப்படுகிறது.*

*மேலும் அரசுடன் முதற்கட்ட பேச்சு வார்த்தை நடத்தக் கூட தொழில் நிறுவனங்கள் தயக்கம் காட்டுவதாக தகவல் வெளியாகியுள்ளது. தமிழகத்தில் புதிய ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, தமிழக வெற்றிக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றுள்ள தற்போதைய சூழல், புதிய முதலீட்டாளர்கள் மத்தியில் சில கேள்விகளை எழுப்பியுள்ளதாகப் பேச்சுக்கள் எழுகின்றன. தற்போதைய தொழில்துறை அமைச்சராக கீர்த்தனா இருக்கிறார்.*

*தி.மு.க. ஆட்சியில் புதிய நிறுவனங்கள் தொழில் தொடங்க வேண்டும் என்றால் இந்தியாவிலேயே முதலில் தேர்ந்தெடுக்கும் மாநிலமாகத் தமிழகம் இருந்தது. ஆனால் தற்போது 'முதலீட்டாளர்களின் நம்பிக்கை மாநிலம்' என்ற முகவரிக்கு சவால்கள் எழத் தொடங்கியுள்ளன. த.வெ.க. அரசு பதவி ஏற்ற நேரத்தில் ஓசூரில் தொடங்குவதற்கு திட்டமிடப்பட்டு அனைத்துப் பணிகள் முடிந்த நிலையில், ரூ.1500 கோடி மதிப்பிலான போர் விமான உற்பத்தி திட்டம் ஆந்திராவுக்கு சென்றது. இதனால் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களின் வேலைவாய்ப்பு பறிபோனது. இது குறித்து புதிய த.வெ.க. அரசு கண்டு கொள்ளவில்லை.*

*இது ஒருபுறம் இருக்க தற்போது 2வது பெரிய தொழிற்சாலை திட்டமும் ஆந்திராவுக்கு சென்று விட்டது. இருசக்கர வாகன உற்பத்தியில் உலகளவில் தனித்த அடையாளம் பெற்றுள்ள ராயல் என்பீல்டு நிறுவனம் தனது அடுத்த கட்ட பெரிய முதலீட்டை தமிழ்நாட்டிலிருந்து ஆந்திரப் பிரதேசத்திற்கு மாற்றியிருப்பது, அரசியல் மற்றும் தொழில்துறை வட்டாரங்களில் தீவிர விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆந்திரப் பிரதேசத் தின் திருப்பதி அருகிலுள்ள தாடா பகுதியில் புதிய கிரீன்பீல்டு உற்பத்தி ஆலையை அமைக்க ராயல் என்பீல்டு நிறுவனம் திட்டமிட்டுள்ளது. சுமார் ரூ.2500 கோடி மதிப்பிலான இந்த முதலீடு பல கட்டங்களாக செயல்படுத்தப்பட உள்ளது.*

*நிறுவனத்தின் எதிர்கால சந்தைத் தேவைகள் மற்றும் உற்பத்தி விரிவாக்கத் திட்டங்களின் அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதற்கு முன்பு, கடந்த பிப்ரவரி மாதத்தில் தமிழ்நாட்டின் திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு பகுதியில் இயங்கி வரும் ராயல் என்பீல்டு ஆலையை விரிவுபடுத்த ரூ.958 கோடி முதலீடு செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அந்த விரிவாக்கம் நிறைவேற்றப்பட்டால், நிறுவனத்தின் மொத்த ஆண்டு உற்பத்தித் திறன் 20 லட்சம் இருசக்கர வாகனங்களாக உயருமென எதிர்பார்க்கப்பட்டது. தற்போது உள்ள உற்பத்தித் திறன் 14.6 லட்சம் யூனிட்களாக இருந்து, அது முழு பயன்பாட்டை எட்டியிருப்பதாக கூறப்படுகிறது.*

*ஆனால், தற்போது 2வது நிறுவனமான சுமார் ரூ.2500 கோடியிலான பெரிய முதலீடு தமிழ்நாட்டிற்கு வராமல் ஆந்திராவிற்கு சென்றுள்ளது. 'தொழில்துறை வளர்ச்சியில் முன்னணி மாநிலம்' என்ற தமிழ்நாட்டின் நிலை தற்போது பாதிக்கப்படுகிறதா என்ற கேள்வியும் எழுந்துள்ளது. தமிழகத்தில் புதிய ஆட்சி அமைந்த பின்னர், முதலீட்டாளர்களிடையே ஒரு வகையான காத்திருப்பு மனநிலை உருவாகியுள்ளதாக தொழில்துறை வட்டாரங்கள் கூறுகின்றன. குறிப்பாக, கொள்கைத் தெளிவு, நிர்வாகத் தொடர்ச்சி, அனுமதி நடைமுறைகள் மற்றும் முதலீட்டாளர்களுடன் நேரடி தொடர்பு போன்ற அம்சங்களில் தி.மு.க. ஆட்சி காலத்தில் இருந்த உறுதி தற்போது குறைந்துள்ளதாக சில பொருளாதார நிபுணர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.*

*தி.மு.க. ஆட்சிக் காலத்தில், கொரோனா போன்ற கடினமான சூழ்நிலையிலும் தமிழகத்தை தொழில் முதலீட்டிற்கு ஏற்ற மாநிலமாக முன்னிறுத்த பல உலகளாவிய முதலீட்டு மாநாடுகள், துரித அனுமதி திட்டங்கள் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுடன் நேரடி பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. அதன் விளைவாக மின்சார வாகனங்கள், மின்னணு உற்பத்தி, ஏற்றுமதி சார்ந்த தொழில்கள் உள்ளிட்ட பல துறைகளில் தமிழகம் முன்னிலை பெற்றது. ஆனால் தற்போது, புதிய அரசியல் மாற்றங்களுக்குப் பிறகு, புதிய நிர்வாகத்தின் செயல்திறன் எப்படி இருக்கும் என்ற கேள்வி முதலீட்டாளர்களிடையே எழுந்துள்ளதாக கூறப்படுகிறது. இதனால் சில நிறுவனங்கள் தமிழக அரசுடன் முதற்கட்ட பேச்சுவார்த்தைக்குக் கூட முன்வராமல் இருப்பதாக தகவல்கள் பரவி வருகின்றன.*

*ராயல் என்பீல்டின் புதிய ஆந்திரா திட்டம் மூலம் சுமார் 15,000 நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகள் உருவாகும் என மதிப்பிடப்படுகிறது. அந்த வாய்ப்பு தமிழ்நாட்டிலிருந்து நழுவிச் சென்றுள்ளது. இதற்கிடையே கடந்த இரு தினங்களுக்கு முன்பும், சுமார் ரூ.1500 கோடி மதிப்பிலான போர் விமான உற்பத்தி தொடர்பான திட்டம் ஓசூரிலிருந்து ஆந்திராவிற்கு மாற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது. தமிழக வெற்றிக் கழகத்தின் தலைமையிலான புதிய அரசு மாற்றம் என்ற கோஷத்துடன் ஆட்சிக்கு வந்த நிலையில், தற்போது தொழில் துறை முதலீடுகள் வெளியேறுகின்றன என்ற குற்றச்சாட்டுகள் எழுகின்றன.*

*குறிப்பாக இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு, தொழில்துறை விரிவாக்கம் மற்றும் வெளிநாட்டு முதலீடு போன்ற முக்கிய அம்சங்களில் அரசு தெளிவான திட்டங்களை அறிவிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. வரிசையாக தொழில் நிறுவனங்கள் ஆந்திரா செல்வதை தடுப்பதற்கான வழிகளை தொழில்துறை அமைச்சர் கீர்த்தனா எடுக்காமல் கண்டுகொள்ளாமல் இருப்பதாக விமர்சனங்கள் எழுந்துள்ளன. புதிய முதலீடுகளை ஈர்க்க அரசு எந்த அளவுக்கு தீவிரமாக செயல்படுகிறது என்ற கேள்விகள் எழுகின்றன.*

## இயக்கம்!

கொள்கையை
ஜீவனாகக்
கொண்டுள்ள
இயக்கத்தை எந்தத் தேர்தல்
வெற்றி தோல்விகளாலும்
பலவீனப் படுத்த முடியாது.

ஆம்...

அது
லட்சியங்களால்
கட்டி எழுப்பப்பட்டு
ஆற்றலாளர்கள் எனும்
நெருப்புக் கோளங்களால்
காவல் காக்கப்படும்
எஃகுக் கோட்டை.

ஆனால்

கொள்கை என்பதே
அதிகாரம் மட்டும்தான்
என்னும்
குறிக்கோளற்ற
சுயநலத்தில் பிறக்கும்
அவசர நாற்காலிகள்

வெகு சீக்கிரத்தில்
கரையான் அரிப்புக்கு



இரையாகும்
அட்டைக் கோபுரங்களே...

**என்னநாஞ்
சொல்றது**



**மருது அழகுராஜ்**
கழகச் செய்தித்
தொடர்புக் குழு
துணைத் தலைவர்